# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் 2-வது நாள் காட்சிகள்!







கழக இளைஞர் அணி சார்பில், நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில், 'வரலாறு கற்போம்' எனும் தலைப்பில் இளம் பேச்சாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை என்ன என்பதை கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி தனக்கே உரிய பாணியில் பாடல்களோடும் நகைச்சுவை கலந்தும் மிகச்சிறப்பாக விளக்கினார்.




சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் 2வது நாளாக நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில் உலகத் தத்துவங்கள் மற்றும் தலைவர்கள் குறித்து, தத்துவம் தெளிவோம், தலைவர்கள் அறிவோம் எனும் தலைப்பில் திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி செறிவான கருத்துகளை வழங்கி மிகச்சிறப்பான உரை ஆற்றினார்.





கழக இளைஞர் அணி சார்பில், இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமின் ஒரு பகுதியாக, 'கேட்க அதற்குத் தக!' எனும் தலைப்பில் திராவிட இயக்கம் குறித்த மிகச்சிறப்பான வினாடி – வினா நிகழ்ச்சியை, கழகத் தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் மிக நேர்த்தியாக நடத்தினார்.

### சிறையிலிருந்து முன்விடுதலை செய்யப்பட்ட 750 முன்னாள் சிறைவாசிகளுக்கு –

# சுய தொழில் தொடங்கிட - 3 கோடியே 75 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள்!

## தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, பிப்.20-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடந்த ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டு, சமூக வாழ்க்கைக்குத் திரும்பிய 750 முன்னாள் சிறைவாசிகள் சுயதொழில் தொடங்கி வாழ்வாதாரத்தை வளமைப்படுத்தும் வகையில் மொத்தம் ரூ.3 கோடியே 75 லட்சம் நிதி உதவி வழங்குவதன் அடையாளமாக மேடையில் 10 முன்னாள் சிறை வாசிகளுக்கு காசோலைகளை வழங்கினார்.**

சிறைச்சாலைகள் குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை தரும் இடமாக மட்டுமல்லாது, வருங்காலங்களில் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் நல்ல மனிதர்களாக உருவாக்கும் இடமாகத் திகழ்கின்றன. இதற்காக சிறைவாசிகள் தண்டனைக் காலம் முடிவுற்று அவர்களின் விடுதலைக்குப் பின்னர், வேலைவாய்ப்பு பெற அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக் கொள்ள, அவர்களுக்கு கல்வி, தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்சாலைகளில் செயல்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு திறன் மேம்பாடுத் திட்டங்கள் சிறைச்சாலைகளில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

தண்டனைக் காலத்தில் சிறைவாசிகள் உழைப்பின் அவசியத்தை உணரவும், புதுத் திறன்களைக் கற்கவும், விடுதலை பெற்ற பின்னர் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காகவும், சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறும் வகையில் சிறைச்சாலைகளில் நெசவு தொழிற்கூடம் (Weaving), காலணி தொழிற்கூடம் (Shoe Making), புத்தகம் கட்டுதல் (Book Binding), தையற்கூடம் (Tailoring), தச்சுக் கூடம் (Carpentry), அடுமனை தொழிற்கூடம் (Bakery) உள்ளிட்ட பல்வேறு தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும் தோட்டக்கலை மேம்பாடு, விவசாய உற்பத்தி, இயற்கை உர உற்பத்தி போன்ற பயிற்சிகளும் சிறைகளில் அளிக்கப்படுகின்றன. அத்துடன், சிறைவாசிகள் தண்டனைக் காலத்தில் இருக்கும்போதே வேலைவாய்ப்பினை வழங்கிடும் வகையில் சிறை வளாகங்களில் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்கும் ஏற்ற வகையில் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப் பட்டு தகுதியான சிறைவாசிகளைக் கொண்டு இயக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய முயற்சிகள், முன்னாள் சிறைவாசிகள், சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஊக்குவிக்கும் முக்கிய நடவடிக்கைகளாக அமைகின்றன.

சிறைத்தண்டனை முடிவடைந்து சிறைகளிலிருந்து விடுதலையாகும் சிறைவாசிகள் மறுபடியும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்காகவும், நேர்மையான வாழ்க்கை முறைக்குத் திரும்ப உதவுவதற்காகவும், விடுதலை பெற்ற சிறை வாசிகளின் நலனுக்காக, தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம் 1921-ஆம் ஆண்டு, நிறுவனச் சட்டம் 1913-ன் படி ஒரு அலுவல் சாரா நிறுவனமாகத் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச் சங்கத்தின் சார்பில், சிறை மீண்டவர்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கும், வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்கும் தேவையான நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களது சமூகப் புத்துயிர்ப்பை உறுதி செய்யும் வகையில், வேலைவாய்ப்புகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் மறுவாழ்வு திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக, இந்தியாவில் தமிழ்நாடு மட்டுமே சிறை மீண்டோர் நலச்சங்கத்தை செயல்படுத்தி வரும் ஒரே மாநிலமாக திகழ்வது, மிகுந்த பெருமைக்குரியதாகும். இது, தமிழ்நாடு அரசு மற்றும் சிறைத்துறை மேற்கொள்ளும் முன்மாதிரியான மறுவாழ்வு முயற்சிகளின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது.

தமிழ்நாடு சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட 750 முன்னாள் சிறைவாசிகளுக்கு, தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம் மூலமாக கறவை மாடுகள் வாங்குதல், தையல் தொழில், தேநீர் கடை, சலவைத் தொழில், உணவகம் அமைத்தல் போன்ற சுயதொழில்கள் தொடங்கிட 3 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக 10 முன்னாள் சிறைவாசிகளுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர். மகேஷ்வர் தயாள்,

சிறைத்துறை தலைவர் (தலைமையிடம்) இரா.கனகராஜ், மதுரை சரக சிறைத்துறை துணைத் தலைவர் ஆ.முருகேசன், தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் பி.சிவபிரசாத், தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச் சங்க கௌரவ பொருளாளர் எஸ்.ஞானேஸ்வரன் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.